புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திரு. த. நாராயணன், B.SC.,M.B.A

ந.க.எண். 4997/2024/எப்1 நாள் 30.08.2024

| | |
|---|---|
| பொருள் | மனைப்பிரிவு – புதுக்கோட்டை மாநகராட்சி – புதுக்கோட்டை வடக்கு கிராமம் சர்வே எண். 85/14C2B, 0.29 ஏக்கர் (1174.00ச.மீ) பரப்பளவு இடத்திற்கு 5 மனைகள் கொண்ட மனைப்பிரிவு அங்கீகரித்து உத்தரவிடுதல் – தொடர்பாக. |
| பார்வை | 1. உறுப்பினர் செயலர் புதுக்கோட்டை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம் /நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் புதுக்கோட்டை அவர்களின் கடித ந.க.எண்.1633/2023/புமா., நாள்:28/12/2023.<br>2. நகர்மன்ற தீர்மானம் எண். 760, நாள்:30.07.2024.<br>3. மனுதாரர் திரு.V.ராமன் த/பெ வெள்ளைச்சாமி, அவர்களது விண்ணப்பம் 03.07.2024. |

******

<u>உத்தரவு :</u>

பார்வை 1ல் கண்டுள்ள செயல்முறை உத்தரவில் புதுக்கோட்டை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட புதுக்கோட்டை வடக்கு கிராமம் சர்வே எண்.85/14C2B, இடத்தில் 0.29 ஏக்கர் (1174.00ச.மீ) பரப்பளவு இடத்திற்கு உறுப்பினர் செயலர் / துணை இயக்குநர் புதுக்கோட்டை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம், புதுக்கோட்டை அவர்களால் மனைப்பிரிவு வரைபடத்திற்கு LP/DTCP(PD) NO.64/2023 என தொழில் நுட்ப அனுமதியும், திட்ட அனுமதி எண்.15/2023 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் அடங்கிய சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை மாநகராட்சிக்கு மனுதாரரால் தானமாக தானப்பத்திரம் எண் 4255/2021 நாள்31.08.2023 ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மாநகராட்சிக்கு மனைப்பிரிவு அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநரது இணைய வழி சேவை வழியாக (S.R.No.109/CP/24-25/0005797) விண்ணப்பித்து மாநகராட்சிக்கு செலுத்தவேண்டிய உரிய கட்டணங்கள் CSR Fees ரூ.6000/–மனைப்பிரிவு சாலை பராமரிப்பு வைப்புத் தொகை கட்டணம் ரூ.1,00,000/. மற்றும் அரசுக்கு செலுத்தவேண்டிய நிலப்பயன் மாற்றக் கட்டணம் ரூ.62,700/– மற்றும் கூராய்வு கட்டணம் ரூ. 5,000/- செலுத்தியுள்ளார்கள்.

மனைப்பிரிவிற்கு துணை இயக்குநர், நகர் ஊரமைப்புத் துறை புதுக்கோட்டை அவர்களின் நிபந்தனைகளின் படி தார்சாலை அமைக்கப்பட்டு மழைநீர் வடிகால் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது. தெருவிளக்கு மின்கம்பங்கள் அமைக்க தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தொகை செலுத்தப்பட்டுள்ளது. தெருவிளக்கு பிட்டிங்க்கு மாநகராட்சிக்கு ரூ. 8000/– செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை 1ல் கண்ட உறுப்பினர் செயலர் / துணை இயக்குநர் நகர் ஊரமைப்புத் துறை புதுக்கோட்டை அவர்களின் உத்தரவில் கண்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் பின்பற்றுதலுடன் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

ஆணையாளர்
புதுக்கோட்டை மாநகராட்சி

30/8/2024

இணைப்பு : மனைப்பிரிவு வரைபடம்

பெறுநர் : திரு. V. ராமன் த/பெ வெள்ளைச்சாமி
எண் 1040, கிளிக்குடி, கிளிக்குடி அஞ்சல்
இலுப்பூர் தாலுகா,
புதுக்கோட்டை.

நகல் : நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், புதுக்கோட்டை,
நகல் : இணை சார்பதிவாளர், புதுக்கோட்டை.
நகல் : நகராட்சி பொறியாளர், புதுக்கோட்டை மாநகராட்சி
நகல் : வருவாய் அலுவலர், புதுக்கோட்டை மாநகராட்சி
நகல் : துப்புரவு அலுவலர், புதுக்கோட்டை மாநகராட்சி